உ
ஓம்
சரவணபவ

# அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி ஆலயம்

## பொகவந்தலாவ.

## பெரும் குடமுழுக்குத் திருநாள் (மகா கும்பாபிஷேகம்)

07-02-2001



மூலவர்

# பஜனைப் பாடல்கள் அன்பளிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனா விடுவான் என்னை
முன்னின்று காப்பாற்றாது
திடமுடன் இருக்கின்றேன்
திக்கற்றா தவித்திடுவேன்

முருகு

தொகுத்தவர்
டாக்டர். முருகு நல்லசேகரம்பிள்ளை J.P

அன்பளிப்பு
கூ. கிருஸ்ணான்

டாக்டர். முருகு நல்லசேகரம்பிள்ளை J.P
பொகவந்தலாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை

# வெளியீடும் ஒரு விண்ணப்பமும்

அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி ஆலயத்தில் பழநி பாண்டவர் மூலவராக இருந்து அருள்பாலித்துக் கொண்டிருப்பது இலங்கையில் பொகவந்தலா நகரில் மட்டுமே. தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் புதிதாக வசந்தமண்டபம். வசந்தமண்டப முன்வாசல் மண்டபம். புதிதாக நவக்கிரக கோவிலும் விக்கிரகமும். கந்தனுக்கு காவடி தூக்கி ஆரம்பித்து வைத்த இடும்பன் கோவில். முன்வாசல் கர்ண்ண கூடு கோவில்களும். சிற்பங்களும். ஓங்கார ஓசை எழுப்ப புதிய காண்டமணியும். முழுமையான வர்ணம் தீட்டுதல் ஆகிய திருப்பணிகள் பல லட்சம் ரூபா செலவில் செய்யப்பட்டுள்ளது. மகாகும்பாபிஷேகம் விக்கிரம ஆண்டு தைமாதம் 25ம்நாள் (07-02-2001) புதன்கிழமை தைப்பூசத் திருநாளில் நடைபெற திருவருள் துணைபுரிந்துள்ளது.

பெருங்குடமுழுக்கு நன்நாளில் நூல் ஒன்று வெளியிட வேண்டுமென்று. பொகவந்தலாவைத் தோட்டத்தில் இருந்து அச்சுத் தொழில்புரியும் கிருஷ்ணன் அடியேனைக் கேட்டுக்கொண்டார். அதற்கிசைவாக (பஜ + ஜன = வழிபாடு + மக்கள்) மக்கள் வழிபாட்டுக்கு உதவும் முகமாக - ஆலயங்கள் தோறும் பஜனை வழிபாடு செய்யவும். தோட்டங்கள் எல்லாம் மார்கழி பஜனையின் போது பக்திமயமாக இருக்க வேண்டும் என்பதற்காக உயர்ந்த ராம சங்கீர்த்தன பாடல்களையும் தொகுத்து கொடுத்தேன். அன்பர் புத்தகம் உருவாக்கி வெளியிட்டுள்ளார். இன்பம் பெற்றுள்ளார். எளிதாக தெய்வத்தை பக்தி கொள்ள வைக்கும் பஜனையை வயது பால் வேறுபாடின்றி எல்லோரும் பாடிப்பரவி இறைவன் திருவருள் பெற்று உயர்வடைவோம்.

இறைவனைப் பார்க்காமலும். அவரைப் பற்றி நினைக்காமலும் ஒரு கணம் கூட இருக்க முடியாது என்ற நிலைவரும் வரை அவரைப் பக்தி கொள்ள வேண்டும் பாடிப் பரவ வேண்டும் - இறைவனைப்பற்றி பாடாத - பேசாத - புகழாத நாளெல்லாம் பிறவா நாளே என்று எண்ணி. இறைவா! தங்களுடைய அளவற்ற கருணையினால் எனக்கு உதவி செய்ய வேண்டும். தங்கள் திருவடிகளை பூரணமாக சரணடைகின்றேன் - என்னை நல்வழிப் படுத்துங்கள் என பிரார்த்திப்போமாக.

*எல்லாம் முருகன் செயல்.*
*இன்பமே சூழ்க.*

டாக்டர் முருகு. **நல்லசேகரம்பிள்ளை** J.P
அறங்காவலர் சபை இணைச் செயலாளர்
திருப்பணிசபை பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை மீதிலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
சஞ்சலங்கள் தீர்ப்பவர் சகலவினை போக்குவார்
யானைமுகங் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானைவயிறு படைத்தவர் பக்தர்குறை தீர்ப்பவர்.
அவல், கடலை சுண்டலும், அரிசி கொழுக் கட்டையும்
ஆவலுடன் தின்னுவார் அல்லல் தீர்க்கும் பிள்ளையார்.

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம்நமசிவாய ஓம்நமசிவாய ஓம்நமசிவாய
சிவாயநம ஓம் சிவாயநம ஓம் சிவாயநம ஓம்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

## முருகன் பாடல்கள்

### அரோகரா

| | | |
|---|---|---|
| அரகரோகரா | சுவாமி | அரகரோகரா |
| அரகரோகரா | சுவாமி | அரகரோகரா |
| கதிர்காம | வேலனுக்கு | அரகரோகரா |
| கந்தப்ப | சுவாமிக்கு | அரகரோகரா |
| திருப்பரங்கிரித் | தீரனுக்கு | அரகரோகரா |
| திருஞ்செந்தூர்த் | தேவனுக்கு | அரகரோகரா |
| குன்றிலாடும் | குமரனுக்கு | அரகரோகரா |
| குஞ்சரிதன் | கணவனுக்கு | அரகரோகரா |
| குறவள்ளிக் | காந்தனுக்கு | அரகரோகரா |
| குணங்கடந்த | கோலனுக்கு | அரகரோகரா |
| சோலைமலைக் | கிழவனுக்கு | அரகரோகரா |
| சொகுசுக்கார | முருகனுக்கு | அரகரோகரா |
| சிவசக்தி | வடிவனுக்கு | அரகரோகரா |
| சிங்கார | வேலனுக்கு | அரகரோகரா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அகங்கார | நாசனுக்கு | அரகரோகரா |
| அன்பர்களின் | நேயனுக்கு | அரகரோகரா |
| தண்டாயுத | பாணிக்கு | அரகரோகரா |
| தண்டாயுத | பாணிக்கு | அரகரோகரா |
| ஓங்காரத் | தத்துவனுக்கு | அரகரோகரா |
| ஓம் சக்தி | தந்தவனுக்கு | அரகரோகரா |

## வேல் வேல்

வேல் வேல் வேலவனே வேலாயுதா - எங்கள்
வினைகள் எல்லாம் தீர்த்திடுவாய் வேலாயுதா வேல் வேல்
கந்தா கடம்பா வேலாயுதா - எங்கள்
கதிர்காம வேலவனே வேலாயுதா (வேல் வேல்)
திருச்செந்தூர் வேலவனே வேலாயுதா - எங்கள்
திருப்பரங்கிரி தீரனே வேலாயுதா (வேல் வேல்)
சோலைமலைக் கிழவனே வேலாயுதா - எங்கள்
சொகுசுக்கார குமரனே வேலாயுதா (வேல் வேல்)
பழநிமலை முருகனே வேலாயுதா - எங்கள்
பவவினையை நீக்கிடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
சுவாமி மலை நாதனே வேலாயுதா - எங்கள்
சுப்பிரமணிய சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)
திருத்தணிகை முருகனே வேலாயுதா - எங்கள்
தண்டாயுத பாணி சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)

வள்ளி மோகனா புள்ளி மயில்வாகனா
ஆறுமுகக் கந்தனே சுந்தரவதனா
குமரகுரு பர சண்முக வடிவேலவா
முருகா ஹரிமுருக சிவசக்தி பாலக
(வள்ளி மோகனா)

## வேல் முருகா மால்மருகா

வேல்முருகா மால்மருகா வாவா சண்முகா
கால்பிடித்தேன் காத்தருள வாவா சண்முகா

நால்வேதப் பொருளான நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா
செல்லமாக சிவன் அணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர் வேல் தாங்கிய என்தேவே சண்முகா
(வேல்முருகா மால்மருகா)

ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா சண்முகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கார ஓங்கார சீலனே சண்முகா
(வேல் முருகா மால்மருகா)

நாறுமாலை அணிமார்பா நாயகா சண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா சண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறணித்தார் வினை போக்கும் நீதமே சண்முகா
(வேல் முருகா மால்மருகா)

பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா சண்முகா
பத்தருடன் கூட்டிடுவாய் முத்தனே சண்முகா
ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா சண்முகா
அடியார் உள்ளக் குகையமர்ந்த ஆனந்தா சண்முகா
(வேல்முருகா மால்மருகா)

வீடும் நாடும் நின்திருந்தாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல்கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னைநாட ஆடிவா சண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா சண்முகா
(வேல்முருகா மால்மருகா)

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறை அன்புருவே ஏ முருகா சண்முகா
தில்லையில் ஆடும்தேவி பாலகா சண்முகா
திருட்டுத் தனமாய் குறக்கொடியை கொண்டவா சண்முகா
(வேல்முருகா மால்மருகா)

தொல்லை எல்லாம் கடந்தபாதம் தந்திடாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் சண்முகா
கல்லை ஒத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா
கல்லெனச் சிலம்பொலிக்க ஓடிவா சண்முகா
(வேல்முருகா மால்மருகா)

சுப்ரமணியம் சுப்ரமணியம் சண்முகநாதா சுப்ரமணியம்
சுப்ரமணியம் சுப்ரமணியம் சண்முகநாதா சுப்ரமணியம்
சிவசிவ சிவசிவ சுப்ரமணியம்
ஹர ஹர ஹர ஹர சுப்ரமணியம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமணியம்
ஹர ஹர சிவசிவ சுப்ரமணியம
சிவ சரவணபவ சுப்ரமணியம்
குரு சரவணபவ சுப்ரமணியம்

## கந்தவேலன் காவடி

காவடியாம் காவடி கந்த வேலன் காவடி
காவடியாம் காவடி காணவேண்டும் கண்கோடி
வேல்முருகன் நாமத்திலே விதவிதமாய் காவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேலன் காவடி வீரவேலன் காவடி
சிங்கார வேலனுக்கு சின்ன சின்ன காவடி
சுவாமிமலை நாதனுக்கு சின்னசின்ன காவடி
(காவடியாம் காவடி கந்த)

பழநிமலை பாலனுக்கு பால்குடத்தில் காவடி
தென்பழனி வேலனுக்கு தேன்குடத்தில் காவடி
ஆறுமுக வேலனுக்கு அழகுமயில் காவடி
வண்ண வண்ணக் காவடி கந்தவேலன் காவடி

## வாவா முருகா

| | | | |
|---|---|---|---|
| அன்பருக்கு | அன்பனே | நீ வாவா | முருகா |
| ஆறுபடை | வீடுடையாய் | நீ வாவா | முருகா |
| இன்பமய | ஜோதியே | நீ வாவா | முருகா |
| ஈசனுமை | பாலகனே | நீ வாவா | முருகா |
| உலகநாதன் | மருமகனே | நீ வாவா | முருகா |
| ஊமைக் | கருள் புரிந்தவனே | நீ வாவா | முருகா |
| எட்டுக்குடி | வேலவனே | நீ வாவா | முருகா |
| ஏறுமயில் | ஏறியே | நீ வாவா | முருகா |
| ஐங்கரனுக்கு | இளையவனே | நீ வாவா | முருகா |
| ஒய்யாரி | வள்ளி லோலா | நீ வாவா | முருகா |
| ஓங்கார | தத்துவமே | நீ வாவா | முருகா |
| ஔவைக் | குபதேசித்தவா | நீ வாவா | முருகா |
| அகில | லோக நாயகனே | நீ வாவா | முருகா |

## ஓம் முருகா

ஓம் முருகா ஓம் முருகா
ஓம் முருகா ஓம் முருகா
தீராத எண்ணச் சுழியில் சுழன்று
தீராத துன்பத்தில் ஆழ்ந்தேன் முருகா

(ஓம் முருகா)

மெய்போலத் தோன்றும் பொய்யுலகில் பிறந்து
பொய்யான அன்பில் மயங்கினேன் முருகா

(ஓம் முருகா)

மாயா மயக்கம் தெளிந்து முருகா
மெய்யன்பில் நீராடி நிற்கும் மனத்தால்
உன்னை நினைத்து நினைத்து உருகி
உள்ளொளி காண்பது என்றோ முருகா

(ஓம் முருகா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமெல்லாம் போன பின்பு முருகா
காலினைக் காண காலம் வருமோ முருகா
நிர்மல மேனியனைக் கண்குளிரக் காணும்
நேரமிதே...முருகா...நேரமிதே... (ஓம் முருகா)

## கந்தா சரணம் சரணம்

அருளார் அமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம்
பொருளா எனைஆள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணம் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணம் சரணம்
மயில் வாகனனே சரணம் சரணம்
கருணா லயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா

வருவாய் மயில் மீதினிலே
வடிவேலுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா முருகா)

அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே - அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே (முருகா முருகா)

சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா முருகா)

அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய் சரணம் சரணம்
குமரா பிணியா வையுமே சிதறக்
குமுறும் கூர்வே லவனே சரணம் (முருகா முருகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் யடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய். அடியார்
புதுவாழ் வுறவே புவி மீதருள்வாய் (முருகா முருகா)
குருவே பரமன் மகனே
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
சமரா திபனே சரணம் சரணம். (முருகா முருகா)

## கந்தரநுபூதி

*அருணாகிரி நாதர் அருளியது*

முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா முருகா

(1) ஆடும் பரி வேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே.

(2) உல்லாச நிராகுல யோக வித
சல்லாப விநோதனும் நீ அலையோ
எல்லாம் அற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூபதியே

(3) கெடுவாய் மனனே கதிகேள் கரவா
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.

(4) கார்மாமிசை காலன் வரின் கலபத்
தேர்மா மிசை வந் தெதிர்ப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே

(5) முருகன் தனிவேல் முனிநங் குருவென்று
அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ
உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று என நின்றதுவே

(6) கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசந் தரவென்று இசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூர விபாடணனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) செவ்வான் உருவில் திகழ் வேலவனன்று
ஒவ்வாதது என உணர்வித்தது தான்
அவ்வாறு அறிவார் அறிகின் றலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே

(8) பாழ் வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய் எனஎன்னை விதித் தனையே
தாழ்வானவை செய்தன தாமுளவோ
வாழ்வாய் இனி நீ மயில்வாகனனே!

(9) நாதா குமரா நமலென்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருளோ
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா! குறமின் பதசேகரனே.

(10) சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படிதந்த சொல்லு மதோ!
வீடுஞ் சுரர் மாமுடி வேதமும் வெங்
காடும் புனமும் கமழும் கழலே!

(11) மதிகெட் டறவாடி மயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்!
நதிபுத்திர ஞான சுகாதி பவத்
திதிபுத்திரர் வீடு அடு சேவகனே

(12) உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மதியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய்க் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## இராம பஜன்

மகா மந்திரம்
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹேரே ஹேரே
ஹரே கிருஷ்ண ஹேரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே.

ஸ்ரீராம் ஜெயராம் ஜய ஜய ராம் ஓம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜய ஜய ராம்
கோவிந்த ஜய ஜய கோபால ஜய ஜய
ராதா ரமணா ஹரி கோவிந்தா ஜய ஜய ஓம்
நாராயணா நாராயணா நாராயணா ஜய கோவிந்தா ஹரே
நாராயணா நாராயணா நாராயணா ஜய கோபால ஹரே
நாராயணா நாராயணா நாராயணா பஜமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயண நாராயண நாராயண ஸ்ரீமன்
நாராயண நாராயண நாராயண பத்ரி
நாராயண நாராயண நாராயண லட்சுமி
நாராயண நாராயண நாராயண ஹரிஓம்.

## ஓம் நமோ நாராயண

ஓம் நமோ நாராயணா ஓம் நமோ நாராயணா
ஓம் நமோ நாராயணா ஓம் நமோ நாராயணா
பிறவிதோறும் வினைமிகுந்து பெருகுகின்ற இருளினை
அகலவைக்கும் அருணதீபம் ஓம் நமோ நாராயணா (ஓம் நமோ)
ஊறுதுன்பம் உடல்வியாதி ஊழ்விடாதே வறுமையும்
ஆறவைக்கும் அருள்மருந்து ஓம் நமோ நாராயணா (ஓம் நமோ)
ஏக்கமாம் குழிக்குள்ளே இருண்டுருண்ட வேளையில்
தூக்கிடும் துணைக்கரம் ஓம் நமோ நாராயணா (ஓம் நமோ)
சோக மோக தாகமீறிச் சோர்வு விஞ்சும்வேளையில்
கருணையாய புனிதகங்கை ஓம்நமோநாராயணா (ஓம் நமோ)
ஜனனமரண பயதரங்க ஸாகரம் கடந்திட
உடனு வந்து காக்கும் ஓடம் ஓம் நமோ நாராயணா (ஓம் நமோ)
கடுகடுத்து முனைதொடுத்த கால சூலம் சீறுநாள்
உயிர்தடுத்த கவசமாகும் ஓம் நமோ நராயணா (ஓம் நமோ)
இன்ப துன்ப வலையில் பட்டு இதயம் சிதறும் வேளையில்
அன்புத் தீபமாய் ஒளிர்ந்து அமைதிகாக்கும் மந்திரம் (ஓம் நமோ)
அகந்தை மகதை என்னும் நோய்கள் தம்மை வாட்டும் போதிலே
தகுந்த மருந்தாய் அவற்றை ஒழித்து உயிரைக் காக்கும் மந்திரம்
(ஓம் நமோ)

நீதிமங்கி அநீதியெங்கும் ஓங்கும் துன்ப காலத்தில்
ஓதினாருக்கு உய்வுநல்கும் ஆதிமுதல் மந்திரம் (ஓம் நமோ)
பக்தி என்னும் சுவைகலந்து தினமும் இனிதே ஓதினால்.
முத்தி என்னும் நல்ல நிலையை
அளிக்க வல்ல மந்திரம் (ஓம் நமோ நாராயணா)
ஓதும்தோறும் சுவை பயக்கும் ஒப்பிலாத மந்திரம்
மாதவம் போல் பலன்னளிக்கும் அற்புதம் இந்த மந்திரம்
(ஓம் நமோ நாராயணா)
ஓம் நமோ நாராயணா ஓம் நமோ நாராயணா
உலகலாம் முழக்க வேண்டும் ஓம் நமோ நாராயணா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்

*பல்லவி*

தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்
துரிதத்தை பரிஹரிப்பார் - நாராயணன் (தூணிலும்)

*அனுபல்லவி*

ஆவண மில்லாத அன்பர்க ளிதயத்தில்
காணப் படுங்கருணைக் கடலாகிய கண்ணன் (தூணிலும்)

*சரணம்*

உன்னிலு மிருப்பார் என்னிலு மிருப்பார்
உயிருக் குயிராயு மிருப்பார் - நாராயணன்
அன்னியமா எண்ணாத அமலசித்த முள்ளோர்க்கு
பின்னப் படா திலங்கும் பிரம்மா னந்தவஸ்து (தூணிலும்)

## கோவிந்த ஜய கோவிந்தா

| | |
|---|---|
| கோவிந்தா ஜய | கோவிந்தா |
| கோவிந்தா ஜய | கோவிந்தா |
| கமலா வல்லப் | கோவிந்தா |
| கமனீ யானன | கோவிந்தா |
| வேணு விலோலா | கோவிந்தா |
| விஜய கோபாலா | கோவிந்தா |
| கஞ்ஜ விலோசன | கோவிந்தா |
| கானிய மர்த்தன | கோவிந்தா |
| பதுகுல திலகா | கோவிந்தா |
| நித்தி யானந்தா | கோவிந்தா |
| பக்த வச்சல | கோவிந்தா |
| பகவத பிரியா | கோவிந்தா |
| நந்த குமாரா | கோவிந்தா |
| நவனீத சோரா | கோவிந்தா |
| தீன தயாளா | கோவிந்தா |
| தீன பந்து | கோவிந்தா |
| முகுந்தா மாதவ | கோவிந்தா |
| ராதா ரமணா | கோவிந்தா |
| ராஜீவ தேத்ர | கோவிந்தா |
| கோகுல நந்தன | கோவிந்தா |
| கோவிந்த ஜய | கோவிந்தா |
| கோவிந்த ஜய | கோவிந்தா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னடியில் அன்பு வைத்தேன்

| | |
|---|---|
| உன்னடியில் அன்பு வைத்தோம் | கண்ணபரமாத்மா |
| உலகெல்லாம் நீ எனக்கு | கண்ணபரமாத்மா |
| வண்ணமலர் சோலையிலே | கண்ணபரமாத்மா |
| வசந்த மணம் பரப்புகின்றாய் | கண்ணபரமாத்மா |
| பொன்பரவும் அருணனிலே | கண்ணபரமாத்மா |
| புன்னகை செய் அருளழகா | கண்ணபரமாத்மா |
| மின்னொளிரும் மேகத்திலே | கண்ணபரமாத்மா |
| மின்னுவதுன் வண்ணமடா | கண்ணபரமாத்மா |
| வஞ்சனை செய் பூதகியைக் | கண்ணபரமாத்மா |
| வட்டமுலை உண்டு கொன்றாய் | கண்ணபரமாத்மா |
| பிஞ்சிளஞ் செய் தளிரடியால் | கண்ணபரமாத்மா |
| மேய்ச் சகடை உதைத்தவனே | கண்ணபரமாத்மா |
| கன்றரக்கன் உடலைவிசிக் | கண்ணபரமாத்மா |
| கலகலெனக் கனியுதிர்த்தாய் | கண்ணபரமாத்மா |
| குன்றெடுத்துக் கோகுலத்தில் | கண்ணபரமாத்மா |
| கொடும்புயலைத் தடுத்து நின்றாய் | கண்ணபரமாத்மா |
| நச்சரவம் மேலிருந்து | கண்ணபரமாத்மா |
| நர்த்தனம் செய் அர்த்தமென்ன | கண்ணபரமாத்மா |
| காற்றினிலும் பூங்குழலே | கண்ணபரமாத்மா |
| காதில் வந்து கொஞ்சுதப்பா | கண்ணபரமாத்மா |
| அச்சமில்லை அச்சமில்லை | கண்ணபரமாத்மா |
| அருள் எம்மைக்காக்குமப்பா | கண்ணபரமாத்மா |
| கண்ணபரமாத்மா கண்ணபரமாத்மா | கண்ணபரமாத்மா |
| ஆற்றினிலும் வேதவொலி | கண்ணபரமாத்மா |
| ஆத்மசுகம் பேசுதப்பா | கண்ணபரமாத்மா |
| ஆவியிலே கலந்துவிட்டய் | கண்ணபரமாத்மா |
| அறிவினுக்கும் அறிவனாய் | கண்ணபரமாத்மா |
| நாவினிலே சொல்லச் சொல்ல | கண்ணபரமாத்மா |
| நல்லமுதம் போல் இனிப்பாய் | கண்ணபரமாத்மா |
| கண்ணபரமாத்மா கண்ணபரமாத்மா | கண்ணபரமாத்மா |

## பஜ கோவிந்தம்

பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்
- கோவிந்தம் பஜ மூடமதே
பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்
- கோவிந்தம் பஜ மூடமதே
பகவான் கண்ணன் பதமேய் செந்தம்
அறிவாய் உன்தன் பாடமதே (பஜ கோவிந்தம்)
உலகினில் பலகோடி உயிர்வகை உருவாகும்
நிலையன்று விளையாடி நிழலென்று தெளிவாகும்
ஆசைகள் அறியாத அருள்வழி நீதேடு
கீதையின் நாயகன் கிருஷ்ணனின் துதிபாடு
(பஜ கோவிந்தம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானெனும் அகங்காரம் எனதெனும் மமகாரம்
ஞானத்தின் எதிர்வேதம் ஊனத்தின் அடையாளம்
பிறவிகள் வாராத பேரின்ப நிலைதேடு
குழலிசை கோவிந்தன் புகழினை தினம்பாடு
(பஜ கோவிந்தா)

## கோவிந்தா கோவிந்தா

கோவிந்தா கோவிந்தா கோகுல ரமணா கோவிந்தா
ஜெய்ஹிந்தா ஜெய்ஹிந்தா ஜெயராம ஜெயராம
குழலிசையாலே கோவிந்தா மாடுகள் தன்னை கோவிந்தா
மேய்த்தவன் நீயே கோவிந்தா மாதவராஜ கோவிந்தா
(கோவிந்தா)

வெண்ணை திருடிய கோவிந்தா
மண்ணை உண்ட கோவிந்தா
கோபியருடனே கோவிந்தா
கொஞ்சிடும் ரமணா கோவிந்தா (கோவிந்தா)
நஞ்சுப் பாம்பில் கோவிந்தா
நடனம் புரியும் கோவிந்தா.
திரௌபதை மானம் கோவிந்தா
காத்தவன் நீயே கோவிந்தா (கோவிந்தா)
பாரதப் போரில் கோவிந்தா தர்மத்தை வளர்த்தாய் கோவிந்தா
கீதை கொடுத்த கோவிந்தா சிந்தை நிறைந்த கோவிந்தா
(கோவிந்தா)

ராதா கிருஸ்னா கோவிந்தா ரகுபதி ராகவ கோவிந்தா
மாயக் கண்ணா கோவிந்தா மலரடி தொழுதோம் கோவிந்தா
(கோவிந்தா)

பாமாருக்மணி கோவிந்தா பரந்தாமனே கோவிந்தா
சங்கு சங்கரம் கோவிந்தா சங்கடம் தீர்க்கும் கோவிந்தா
(கோவிந்தா)

தேவகி மைந்தா கோவிந்தா திருவடிசரணம் கோவிந்தா
மீராபாடிடும் கோவிந்தா கிருஷ்ணா முகுந்தா கோவிந்தா
(கோவிந்தா)

நீலநிறமே கோவிந்தா நின்திருமேனி கோவிந்தா
நாராயணனே கோவிந்தா பாராயணமே கோவிந்தா (கோவிந்தா)

## ரகுபதி ராகவ

| | | |
|---|---|---|
| ரகுபதி | ராகவ | ராஜா ராம் |
| பதித | பாவன | சீதா ராம் |
| ஜனமன | ரஞ்சன | ராம் ராம் ராம் |
| பாப | விமோசன | ராம் ராம் ராம் |
| அனாத | ரட்சக | ராம் ராம் ராம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆபத் | பாத்தவ | ராம் ராம் ராம் |
| பவபய | பஞ்ஜன | ராம் ராம் ராம் |
| கருணா | சாகர | ராம் ராம் ராம் |
| பக்த | வச்சல | ராம் ராம் ராம் |
| முக்திப் | பிரதாயக | ராம் ராம் ராம் |
| ரகுபதி | ராகவ | ராக ராம |

## வெத்தலயில மாலை

வெத்தலயில மாலை கட்டுங்க மாலகட்டுங்களே - எங்க வேதனைய சொல்லி சொல்லி மாலகட்டுங்களே
தோளசி இல கொழுந்து தெடுத்து கோத்து கட்டுங்களே - ராம தோத்திரத்த சொல்லி சொல்லி மாலகட்டுங்களே-
(வெத்தலயில)

கோடி பணம் கேட்டதில்லை மாருதி ராஜா - அவன்
கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா
ராமஜெயம் சொன்னிங் கன்னா வந்து நிற்பானே - தினம்
ராம நாத சாமி பேர பாடி நிற்பானே - (வெத்தலயில)

ஆசையெல்லாம் வேரறுத்த அற்புதசாமி - அவன்
ஓசைதரும் மணி இருக்கும் வால் கொண்ட சாமி
காத்தடிச்சா புயலடிச்சா கலங்கிடலாமா - அந்த
கட்டித்தங்க மனஇருக்கா தவிப்பது ஏம்மா (வெத்தலயில)

பொட்டுவச்சி பொட்டுவச்சி பூச செஞ்சாலே - அவன்
எட்டுவச்சி வாசல் கதவு தட்டுவானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே - அவன்
மெல்ல வந்து தாளமிட்டு கேட்டிருப்பானே - (வெத்தலயில)

கும்மி கொட்டி கும்மி கொட்டி கும்மி போடு - எங்க
மோகனாம் மாருதிக்கு சரணங்கள் பாடு
நம்பி வந்து நம்பி நின்னு நல்வரம் கேளு - மனம்
வெம்பி வெடிக்க தேவையில்லை நன்மை கையோடு
(வெத்தலயில)

## மங்களம்

ஸ்ரீராம சந்திரனுக்கு ஜயமங்களம் - நல்ல
திவ்விய முக சந்திரனுக்கு சுபமங்களம் (ஸ்ரீராம..)

மாரா பிராமனுக்கு மன்னு பரந்தாமனுக்கு
ஈராறு நாமனுக்கு ரவிகுல சோமனுக்கு
கொண்டல் மணிவண்ணனுக்கு கண்ணனுக்கு - மங்களம்.
(ஸ்ரீராம சந்திரனுக்கு..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோசலை குமாரனுக்கு வீரனுக்கு மங்களம்
புண்டரீகத் தாளனுக்கு பூசக்கிர வாளனுக்குத்
தண்டுவளத் தோளனுக்கு ஜானகி மணாளனுக்கு
(ஸ்ரீ ராம சந்திரனுக்கு)

பகிரண்ட நாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனாம் அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்
சகல உல்லாசனுக்கு தருமந்த ஹாசனுக்கு
அகில் விலாசனுக்கு அயோத்தியா வாசனுக்கு
மங்களம் மங்களம் மங்களம்.

கோவிந்தா நாம சங்கீர்த்தனம் கோவிந்தா கோவிந்தா
ஜானகி ஜீவன ஸ்மரணம் ஜெய ஜெய ராம ராம்.
அருள் பெரும் ஜோதி தனிப்பெருங் கருனை
அருள் பெரும் ஜோதி தனிப்பெருங் கருனை

## பாங்கிமார் - சிந்து

*(இராமலிங்கம் வள்ளலார் அருளியது)*

அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே - மிக
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமாரே
இன்பவடி வாய்ச்சபையில் பாங்கிமாரே - நடம்
இட்டவர்மேல் இட்டம் வைத்தேன் பாங்கிமாரே
ஈனவுடற் கிச்சை வையேன் பாங்கிமாரே - நட
னேசர் தம்மை எய்தும் வண்ணம் பாங்கிமாரே
உத்தமர்பொன் னம்பலத்தே பாங்கிமாரே - இன்ப
உருவாகி ஓங்குகின்றார் பாங்கிமாரே
ஊனஉலகைக் கருதேன் பாங்கிமாரே மன்றில்
உத்தமருக் குறவாவேன் பாங்கிமாரே
கற்பனையெல் லாங்கடந்தார் பாங்கிமாரே - என்றன்
கற்பனைக்குட் படுவாரோ பாங்கிமாரே
கண்டிலர்நான் படும்பாடு பாங்கிமாரே - மூன்று
கண்ணுடையார் என்பரையோ பாங்கிமாரே
கல்மனமெ லாங் கரைப்பார் பாங்கிமாரே - மனங்
கரையாரென் னளவிலே பாங்கிமாரே
கள்ளமொன்றும் அறியேன்நான் பாங்கிமாரே - என்னைக்
கைவிடவுந் துணிவாரோ பாங்கிமாரே
காமனைக்கண் ணால் எரித்தார் பாங்கிமாரே - என்றன்
காதலைக் கண்டறி வாரோ பாங்கிமாரே
காவலையெல் லாங்கடந்து பாங்கிமாரே - என்னைக்
கைகலந்த கள்ளரவர் பாங்கிமாரே
காணவிழைத் தேன்அவரைப் பாங்கிமாரே - கொண்டு
காட்டுவாரை யறிந்திலேன் பாங்கிமாரே
கிட்டவர வேண்டுமென்றார் பாங்கிமாரே - நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டுமுன்னே எட்டிநின்றார் பாங்கிமாரே
குஞ்சிதப் பொற் பாதங்கண்டால் பாங்கிமாரே - உள்ள
குறையெல்லாம் தீருங் கண்டீர் பாங்கிமாரே
கூற்றுதைத்த பாதங்கண்டீர் பாங்கிமாரே - நங்கள்
குடிக்கெல்லாம் குலதெய்வம் பாங்கிமாரே
கூடல்விழைந் தேன்அவரைப் பாங்கிமாரே - அது
கூடும்வண்ணம் கூட்டிடுவீர் பாங்கிமாரே

## சிவநாம வழி

**இராகம் இந்துஸ்தான்** **பியாக் ஆதிதாளம்**

அம்பலத்தரசே அருமருந்தே
ஆனந்ததேனே அருள்விருந்தே
பொதுநடததரசே புண்ணியனே
புலவரெல்லாம் புகழ் கண்ணியனே
மலைதரு மகளே மடமயிலே
மதிமுக அமுதே இளங்குயிலே
ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே
சிவசிவ சிவசிவ சின்மய தேஜா
சிவசுந்தர குஞ்சித நடராசா
படனவிவேக பரம்பரவேதா
நடனசபேச சிதம்பரநாதா
அரிபிரமதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா
அந்தண வங்கண அம்பர போகா
அம்பல தம்பர அம்பிகை பாகா
அம்பர விம்ப சிதம்பர நாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா
தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா
கனக சிதம்பர கங்கர புரகர
அனக ரம்பர சங்கர ஹரஹர
சகல கலாண்ட சராசர காரண
சகுன சிவாண்ட பராபர பூரண
இக்கரை கடந்திடில் அக்கரையே
இருப்பது சிதம்பர சக்கரையே
என்னுயி ருடம்பொடு சித்தமதே
இனிப்பது நடராச புத்தமுதே
ஐயர் திருச்சபை யாடகமே
ஆடுதலானந்த நாடகமே
உத்தர ஞான சிதம்பரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி எல்லாம் தரும் அம்பரமே
அம்பலவா சிவ மாதேவா
எம்பலவா இங்கு வா வா வா
நடராசன் எல்லோர்க்கும் நல்லவனே
நல்லதெல்லாம் செய்ய வல்லவனே
ஆனந்த நாடகங் கண்டோமே
பரமானந்த போதகங் கொண்டோமே
சகள உபகள நிட்கள நாதா
உகள சதகள மங்கள பாதா
சந்தத முஞ்சிவ சங்கர பஜனம்
சங்கீத மென்பது சற்சன வசனம்
சங்கர சிவசிவ மாதே வா
எங்களை ஆட்கொள வா வா வா
அரகர சிவ சிவ மாதே வா
அருள முகந்தர வா வா வா
நடன சிகாமணி நவமணியே
திடனக மாமணி சிவமணியே
நடமிடு மம்பல நன்மணியே
புடமிடு செம்பல பொன்மணியே
உவட்டாது தித்திக்கும் உள்ளமுதே
தெவிட்டாது தித்திக்கும் தெள்ளமுதே
நடராஜ வள்ளலை நாடுதலே
நந்தொழிலாம் விளையாடுதலே
அருட்பொது நடமிடு தாண்டவனே
அருட்பெருஞ் சோதியென் னாண்டவனே
நடராஜ மாணிக்கம் ஒன்றதுவே
நண்ணுத லாணிப்பொன் மன்றதுவே
நடராஜ பலமது நம்பலமே
நடமாடு வதுதிரு அம்பாலமே
நடராஜர் பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு
சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு
அம்பலம் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு
அம்பலவாணனை நாடினனே
அவனடியாரோடுங் கூடினனே
தம்பதமாம் புகழ்பாடினனே
தந்தன வென்று கூத்தாடினனே
நான் சொன்ன பாடலுங் கேட்டாரே
ஞான சிதம்பர நாட்டாரே
இனித்துயர் படமாட்டேன் விட்டேனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்குரு மேலாணை யிட்டேனே
        இனிப்பாடு படமாட்டேன் விட்டேனே
        என்னப்பன் மேலாணை யிட்டேனே
கன்மார்க்கம் நன்மார்க்கம் நன்மார்க்கம்
சகமார்க்கம் துன்மார்க்கம் துன்மார்க்கம்
        நாதாந்த நாட்டுக்கு நாயகரே
        நடராஜ ரெனில்வரும் நித்தியமே
நான்சொல்வது மிதுகேளீர் சத்தியமே
நடராஜரே சபா நாயகரே
        நல்லோ ரெல்லோர்க்குஞ் சபாபதியே
        நல்வர மியுந் தயாநிதியே
நடராஜர் தன்னடம் நன்னடமே
நடம்புரி கின்றதும் என்னிடமே
        சிவகாம வல்லிக்கு மாப்பிள்ளையே
        திருவாள னானவன் சீர்ப்பிள்ளையே
சிவகாம வல்லியைச் சேர்ந்தவனே
சித்தெல்லாஞ் செய்திடத் தேர்ந்தவனே
        இறவா வரம்தரும் நற்சபையே
        எனமறை புகழ்வது சிற்சபையே
என்னிரு கண்ணுள் இருந்தவனே
இறவா தருளும் மருந்தவனே
        சிற்சபை அப்பனை உற்றேனே
        சித்தியெலாஞ் செயப் பெற்றேனே
அம்பல வாணர் தம்மடியவரே
அருளரசான் மணி முடியவரே
        அருட்பெருஞ் சோதியைக் கண்டேனே
        ஆனந்தத் தெள்ளமு துண்டேனே
இருட்பெரு மாயையை விண்டேனே
எல்லாஞ் செய் சித்தியைக் கொண்டேனே
        கருணாநிதியே குணநிதியே
        கதிமாநிதியே கலாநிதியே
கருணாநிதியே சிவபதியே
தனிமாபதியே சபாபதியே
        கருணாநிதியே சபாபதியே
        கதிமாநிதியே பசுபதியே
சபாபதிபாவம் தபோபிரசாதம்
தயாநிதி போதம் சதோதய வேதம்
        அருட்பிரகாசம் பரப்பிரகாசம்
        அகப்பிரகாசம் சிவப்பிரகாசம்
நடப்பிரகாசம் தவப்பிரகாசம்
நவைப்பிரகாசம் சிவைப்பிரகாசம்
        நாதபரம் பரனே பரநாத சிதம்பரனே
        நாததிகம் பரனே தசநாத சுதந்திரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானநடத் தவனே பரஞானி யிடத்தவனே
ஞானவரத் தவனே சிவஞான புரத்தவனே
ஞானசபா பதியே மறைநாடும் சதாகதியே
தீனதயா நிதியே பரதேவி உமாபதியே
புத்தந்தரும் போதா வித்தந் தருந் நாதா
நித்தந் தரும் பாதா சித்தந் தரும்பாதா

## திருவருள்பா

*இராமலிங்கம் வள்ளலார் அருளியது*

1. அருட்ஜோதி தெய்வம் என்னை
ஆண்டு கொண்ட தெய்வம்
அம்பலத்தில் அடுகின்ற
ஆனந்த தெய்வம்
பொருட்சாறு மறைகள் எல்லாம்
போற்றுகின்ற தெய்வம்
போதாந்த தெய்வம் உயர்
நாதாந்த தெய்வம்
இருட்பாடு நீக்கி ஒளி
ஈத்தருளும் தெய்வம்
எண்ணிய நான் எண்ணிய வாறு
எனக்கு அருளும் தெய்வம்
தெருப் பாடல் உவந்து எனையும்
சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வம் அதேதெய்வம்.

2. தாயாகித் தந்தையுமாய்
தாங்கு கின்ற தெய்வம்
தன்னில் நிகர் இல்லாத
தனித் தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்து கின்றார்
மனத்து அமர்ந்த தெய்வம்
மலரடி என் சென்னிமிசை
வைத்த பெரும் தெய்வம்
காயாது கனியாகக்
கலந்து இனிக்கும் தெய்வம்
கருணை நிதி தெய்வம் முற்றும்
காட்டு கின்ற தெய்வம்
சேயாகி எனை வளர்த்த
தெய்வம் மகாதெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வம் அதே தெய்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒவ்வொரு இந்துவினதும் நடைமுறை வழிபாடு

(1) காலைக்கடன் முடிந்ததும் கடவுளை வணங்குங்கள்:- 2நிமிடமேனும் இறைசிந்தனையில் இருங்கள். இறைவன் திருநாமத்தை உச்சரித்து திருநீறு அணியுங்கள்.

(2) சுவாமிப் படத்திற்கு விளக்கேற்றி பூ நீர் வைத்து தூபம் காட்டித் திருநாமம் சொல்லுங்கள்.

(3) மாலை வேளையிலும் சில நிமிடமேனும் ஆராதனை செய்யுங்கள்

(4) வெள்ளிக்கிழமை, விசேட தினங்களில் - தங்கள் ஆலயத் திருவிழாக்களின் போது கட்டாயமாக மாமிசம் சாப்பிடக்கூடாது - மது அருந்தாது புனித சைவராக இருந்து வழிபடுங்கள் - ஆலயப் பூசைகளில் கலந்து வழிபடுங்கள்

(5) மாதத்தில் இரண்டு தினமாயினும் அவரவர் கிரமத்துக்கு உரியதாக அல்லது விசேட தினத்தை பார்த்து ஒரு நேர உணவு அருந்தி விரதமிருந்து வழிபடுங்கள்.

(6) சிவதீட்சை பெற்றுக்கொள்ளுங்கள்.

(7) தேவார திருவாசகங்கள் ஆகிய பன்னிருதிருமுறைகள்- அருணகிரிநாதர் அருளியவை மற்றும் பஜனைப் பாடல்களை மனனம் செய்து பாடுங்கள்- வெள்ளியோ, செவ்வாயோ, ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனை செய்யுங்கள்.

(8) ஆலயங்களுக்கு அதிகமாகச் செல்லுங்கள். அர்ச்சனைகளின் மந்திர ஓசையில் மனம் பதியுங்கள், மணியோசையை ஓங்கார ஓசையாக நினைத்து ஓம் ஓம் என்று மனதுக்குள் உச்சாடனம் செய்யுங்கள். உங்கள் துன்பத்தை - வேண்டுதலை அவனிடத்தில் ஒப்படைத்து நின்மதி பெறுங்கள் - தியானத்தில் இருங்கள்.

(9) முகத்தில் தெய்வீக ஒளிவீச எப்போதும் நெற்றியில் திருநீறும் - மங்களகரமான பொட்டும் இட்டுக்கொள்ளுங்கள்.

(10) தாய் தந்தையரைக் கண்கண்ட தெய்வமாகப் பேணுங்கள் இறைபதமடைந்த தகப்பனுக்கு அமாவாசையும், தாய்க்கு பூரணை தினத்திலும் விரதம் இருங்கள். உயிர் நீத்து இறைவன் அடியில் இருக்கும் ஆத்மாவுக்கு மாமிசம், மது படைக்காதீர்கள். வணங்கி ஆசி பெறுங்கள்.

(11) ஆலயச் சுற்றாடலை - பூந்தோட்டத்தை மிக புனிதமாக வைத்திருங்கள். இறைசிந்தனையைத் தூண்டும் பாடல்களை சொற்பொழிவுகளை ஒலிபரப்புங்கள். பக்தி நிகழ்ச்சிகளை நடாத்துங்கள்.

(12) தினமும் தூக்க ஆரம்பத்திலும் - தூங்கி எழும் போதும் இறைநாமத்தை உச்சரித்துக் கொள்ளுங்கள்.

(13) நோய் நொடி இழப்புக்களால் - துன்பம் சூழும் வேளையில் மூலமந்திரத்தில் (சிவாயநம)- ஓம் நமச்சிவாய- ஓம்சரவணபவ - ஓம் நமோ நாராயணா, ஓம் சக்தி) ஒன்றை 108 தரமோ அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலேயோ கூடியானவரை எழுதிக் கொள்ளுங்கள்.

(14) குழந்தை முதல் பெரியவர் வரைக்கும் உணவுதந்து உதவுகின்ற தாய்போன்ற இந்துக்களின் புனித உயிரான பசுவை வதை செய்யாதீர்கள் - உணவாக உட்கொள்வதை தவிருங்கள்.

(15) மரணவீடு - இறுதி ஊர்வலத்தின் போது திருவாசகம் முதலியவற்றைப்பாடி ஆத்மா சிவபதம் அடையவும், எம் மனம் அமைதி அடையவும் வழி செய்வோம்.

(16) எல்லா உயிர்கள் இடத்தும் இறைவன் இருக்கிறான் என உணர்ந்து-உயிர்களுக்கு முடிந்தளவு உதவி செய்வோம் - துன்பப்படுத்தாது இருப்போம்.

இன்பமோ துன்பமோ எல்லாம் சிவன் செயல் என்று துணிந்து இறைவனிடத்தில் நம்மை ஒப்படைத்து - எமக்கு நல்வழி காட்டும் என்று வேண்டி - இம்மனிதப்பிறவியின் பயனை பூரணமாகவும் புண்ணியமாகவும் பெற்று உய்வடைவோமாக

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி
ஹரி கோவிந்தா நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா கோவிந்தா

அருட்பெரும் ஜோதி
தனிப் பெரும் கருணை
திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) இறைவனுக்கு விருப்பமானதை மட்டும் செய்தல். "இறைவன் திருவருள்படியே ஆகட்டும்"

2) இறைவனுக்கு விருப்பமில்லாததை செய்யாமல் விடுதல் -பிரதிபலன் எதிர்பாராமலும் வேண்டாமலும் செய்ய வேண்டும்

3) இறைவன் என்னைக் காப்பாற்றுவான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை

4) இறைவா என்னைக் காப்பாற்றுங்கள் என்ற பிரார்த்தனை.

5) (தன்னுடைய தகுதி இன்மையை உணர்ந்து) இறைவா! தங்களுடைய அளவற்ற கருணையினால் எனக்கு உதவி செய்ய வேண்டும். தங்கள் திருவடிகளில் நான் பூரணமாக சரணடைகின்றேன். என நம்பித் தினமும் பிரார்த்திப்போம்.

**பேரகோ கூ பெலஸ்**

**No. 4, மல்லிகா பில்டிங் பொகவந்தலாவ**

சகல விதமான பாடசாலை உபகரணங்களுக்கு

**Tel : 052-67587**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய். எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய். அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய். அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையாதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்".

பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Krishana - Bogawantalawa